DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,

PUDUKKOTTAI.

**SC.No. 104/2017**

| Deposition of witness for | : | P.W.1 | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.G.கோவிந்தன் | Calling | : | |
| Father Name | : | ராக்கப்பன் | Religion | : | |
| Village | : | | Caste | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X 1873, on the day of 24.04.2024.

(1, 3, 4, 5 எதிரிகள் ஆஜர். 2–வது எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை:–**

10.00–10.30 மணி இருக்கும், 6–வது மாதம் 2014 அன்று பேக்கரியில் டீ சாப்பிட்டு நான் வெளியே வந்தபோது , 6 பேர் சேர்ந்து என்னை அடித்துவிட்டார்கள். அந்த 6 பேர் என்பது பழனி, மனுநீதி, மதிவாணன், செல்வம், சேகர், சுப்பிரமணி ஆகியோர் ஆவார்கள். பின்னிட்டு அநத் 6 பேரும் என்னை பைக்கில் தூக்கிக்கொண்டு அவர்களது ஊருக்கு போய்விட்டார்கள். பின்னிட்டு காவல்துறையில் இருந்து அந்த 6 பேருக்கும் போன் மூலம் தகவல் கிடைத்து அந்த 6 பேரும் என்னை வண்டியில் அழைத்து வந்து எங்கள் ஊரில் விட்டுவிட்டார்கள். அதன்பிறகு நான் மீமிசல் காவல் நிலையத்தில் இந்த விவரங்கள் குறித்து புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். இந்த புகார் நான் கொடுத்ததுதான். இது **அ.சா.ஆ.1** ஆகும். மனுநீதி உள்ளிட்ட எதிரிகளின் இறால் பண்ணையை எரித்ததற்கு நான் தான் காரணம் என்று சொல்லிதான் என்னை அவர்கள் அடித்தார்கள். நான் இறால் பண்ணையை எரிக்கவில்ல என்று சொன்னேன். மறுநாள் காலையில் போலீசார் என்னை மருத்துவமனைக்கு அனுப்பி சிகிச்சை எடுத்துக்கொள்ளும்படி சொன்னார்கள். நான் மணமேல்குடி அரசு மருத்துவமனையில் 16 நாட்கள் தங்கி சிகிச்சை எடுத்துக்கொண்டேன் .

அதன்பிறகு வீடு திரும்பினேன் . இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். இந்த சங்கதிகளை சொன்னேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு சொந்த ஊர் ஆர்.புதுப்பட்டினம் என்றால் சரிதான். என்னுடைய ஊருக்கும், மீமிசல் கிராமத்திற்கும் இடையே 2–1/2 கிலோ மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். நான் மீன் பிடிக்கும் தொழில் செய்து வருகிறேன். எங்கள் ஊர் பக்கத்தில் இறால் பண்ணை வைத்தது சம்மந்தமாக எங்கள் ஊர் மக்களுக்கும், ஆலத்தூர் கிராம மக்களுக்கும் இடையே பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான் . எதிரிகளின் இறால் பண்ணை கொட்டகையை கொளுத்திவிட்டதாக சொல்லி ஒரு பிரச்சனை நடந்தது என்றால் சரிதான். அது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்து போலீசார் விசாரித்துக்கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான் . நான் மீன் பிடிக்கும் தொழிலுக்கு எந்த நேரத்திற்கு சென்று, எந்த நேரத்திற்கு திரும்பி வருவேன் என்றால் சாட்சி அதனை குறிப்பிட்டு சொல்ல இயலாது என்று பதில் அளிக்கிறார். காவல் நிலையத்தில் கொடுத்த புகாரை நான் தான் என் கைப்பட எழுதிக்கொடுத்தேன். சாட்சியிடம் புகாரை காண்பித்து கேட்டபோது புகாரில் உள்ள கையொப்பம் மட்டும் தன்னுடையது என்றும் , அதில் எழுதப்பட்டுள்ள வாசகங்களை தான் கைப்பட எழுதவில்லை என்றும் சாட்சியம் அளிக்கிறார் . நான் 16 நாட்கள் மருத்தவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்பதற்கு உண்டான ஆவணங்களை நான் போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் சாட்சி நான் கொடுக்கவில்லை ஆனால் போலீசார் வந்து என்னை பார்த்துவிட்டுபோனார்கள் என்று பதில் அளிக்கிறார். நான் மருத்துவமனையில் இருக்கும்போது போலீசார் என்னை விசாரித்தார்கள் . மருத்துவமனையிலும், பின்னிட்டு காவல்நிலையத்திற்கும் வரசொல்லி, அங்கும் என்னை போலீசார் விசாரித்தார்கள். மொத்தம் இரண்டு முறை விசாரித்தார்கள். இரண்டு முறையும் விசாரித்தபோது போலீசார் வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் சாட்சி என்ன விவரம் என்று சொன்னேன், போலீசார் எழுதிக்கொண்டார்கள் என்று பதில் அளிக்கிறார். என்னுடைய முதல்விசாரணை சொல்லியுள்ள அதே சங்கதிகளைதான் போலீசார் விசாரித்தபோதும் நான் சொன்னேன் . நான் டீ குடித்த பேக்கரியில் இருந்து எங்கள் ஊருக்கு நான் போவது என்றால் பேக்கரியில் இருந்து இசி.ஆர் சாலையில் தெற்கு நோக்கி சென்று இடதுபுறமாக செல்லவேண்டும் என்றால் சரிதான் . நான் முதல்விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் எதிரிகள் என்னை அடிக்கவில்லை என்றும் , என்னை

வண்டியில் தூக்கி செல்லவில்லை என்றாலும் , எங்கள் ஊருக்கும், எதிரிகள் ஊருக்கும் இறால் பண்ணை தொடர்பாக பிரச்சணை இருந்தது என்றாலும் , அதன் தொடர்ச்சியாக எதிரிகளின் இறால் பண்ணை கொட்டகையை தீ வைத்தது தொடர்பாக போலீசில் புகார் கொடுக்கப்பட்டது என்றாலும் , எங்கள் ஊரைச்சேர்ந்தவர்களை விசாரணை செய்தார்கள் என்றாலும் சரியல்ல . அந்த போலீசார் விசாரணையில் இருந்து தப்பிப்பதற்காக எங்கள் கிராமத்தை சேர்ந்தவர்களின் தூண்டுதலின்பேரில் என்னை வைத்து இந்த வழக்கு புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல . சம்பவ தேதியான 6 வது மாதம் 2014 அன்று புகாரில் சொல்லியுள்ள நேரத்தில் மீமிசல் ஊரில் உள்ள பேக்கரிக்கு நான் டீ குடிக்க வரவில்லை என்றால் சரியல்ல.

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

***Sessions Judge,***
***Additional District Court,***
***Pudukkottai.***

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,

PUDUKKOTTAI.

**SC.No. 104/2017**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of witness for | : | P.W.2 | | | |
| Name | : | திரு.நாகூர்பிச்சை | Calling | : | |
| Father Name | : | நாகூரான் | Religion | : | |
| Village | : | | Caste | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X 1873, on the day of 24.04.2024.

(1, 3, 4, 5 எதிரிகள் ஆஜர். 2–வது எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை:–**

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் ஆலத்தூர் கிராமத்தை சார்ந்தவர்கள். மீமிசல் டீ கடையில் டீ சாப்பிட்டுவிட்டு வெளியே வந்தேன் . மனுநீதி, மதிவாணன், சுப்பிரமணியன், சேகர், செல்வம், பழனி ஆகிய 6 பேரும் கோவிந்தனை அடித்து கீழே தள்ளினார்கள் . 14.06.2014 அன்று சம்பவம் நடந்தது. என்ன காரணத்திற்காக அடித்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை, நான் தூரத்தில் இருந்து பார்த்தேன். போலீசார் என்னை விசாரித்தார்கள். எனக்கு தெரிந்த விவரங்களை நான் சொன்னேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நானும், கோவிந்தனும் ஆர் .புதுப்பட்டினம் என்ற ஒரே ஊரைச்சேர்ந்தவர்கள் என்றால் சரிதான் . எனக்கும், அதே போன்று

கோவிந்தனுக்கும் மீன் பிடிக்கும் தொழில் என்றால் சரிதான் . நான் சம்பவத்தை ரொம்ப தூரம் தள்ளியிருந்து பார்த்தேன் என்றால் சரிதான் . இரவு 10.30 மணி என்பதால் யார் யாருடன் பேசிக்கொண்டார்கள், என்ன பேசிக்கொண்டார்கள் என்ற விவரம் நான் தூரத்தில் இருந்து பார்த்ததால் , அது பற்றி தெரியாது என்றால் சரிதான். எங்கள் ஊர்காரர்களுக்கும், ஆலத்தூர்காரர்களுக்கும் இறால் பண்ணை வைப்பது சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான். 1–வது எதிரி மதிவாணனனுக்கு சொந்தமான இறால் பண்ணை கொட்டகைக்கு தீ வைத்தது சம்மந்தமாக பிரச்சனையும் இருந்து வந்தது என்றால் சரிதான் . அ.சா.1 கோவிந்தன் என் நண்பர் என்பதாலும் , ஒரே ஊர்க்காரர்கள் என்பதாலும் , அவர் சொன்னதுபோல் அதனை கேட்டு நான் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

***Sessions Judge,***
***Additional District Court,***
***Pudukkottai.***